திரு. [illegible]

தேர்த் திருவிழா

5

1

ெ, 1929

Y31m2,N26
N29.4.5
199382

35 No. M. 2475. Vol. IV.

7 JUN 19..

"கிராம அபிவிருத்தி"

# ரூரல் இந்தியா

(பாரேஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடைர்ட் டிப்டி கலெக்டர்
ஆபீஸ்: 22, ப்ராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் IV] மே, 1929 [நெ 5

## பொருளடக்கம்.

| நெ. | | பக்கம். |
|---|---|---|
| 35 | நில அடமான பாங்குகள் ஏற்படவேண்டிய அவசியம் | 97 |
| 36 | விவசாயத்திற்கு மாடுகளின் உபயோகம் | 101 |
| 37 | கிராமச் சீரமைப்பு முயர்ச்சிகள் | 103 |
| 38 | ஸமூக ஊழியம் | 104 |
| 39 | வேண்டும் | 105 |
| 40 | செடிவர்க்கங்களின் விஷயங்கள் | 106 |
| 41 | கிருஸ்தவ மிஷன்களின் கிராமச் சீரமைப்பு வேலை | 113 |
| 42 | வர்த்தமானக் குறிப்பு | 114 |
| 43 | ஆரோக்கிய விஷயக் குறிப்புகள் | 120 |

**Annual Subscription (inclusive of Postage)**
**Inland Rs. 3 : Foreign Rs 4—8.**
**Single copy, Inland As 6 : Foreign As 8.**

**Rural India reaches the Villages and Towns of India**
**It is the best medium for advertisement.**

80-வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற

# அசல் ஷண்முகம் பட்டணம்பொடி

காரம் மணம் நிறம் குணம் வாடை உள்ளது.

அநேக மெடல்கள் நற்சாட்சி பத்திரங்கள் பெற்றது.

**ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட்**

**போஸ்டு பாக்ஸ் 140, மதுரை.**

80 வருஷக்காலமாக சென்னையிலே, சிறப்பு வாய்ந்த ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப்பத்திரங்கள் பெற்று தினசரி லெட்டர்களால் புகழ்பெற்று அன்றாடம் நூற்றுக்கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினந்தோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலூக்கா, டவுன் கிராமம் முதல் குக்கிராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்ரோல் வாடை, அசல் பசும்நெய் மணம், குளிர்ந்த குணம், இன்புறும் காரம், பவுன் நிறம் இவ்வைந்தும் ஒருங்கே இணையப்பெற்று நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயரளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோபீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகிவருவது எது? எங்கள் அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே. இனிமேலாவது ஏமார்ந்து போகாமல் எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள்.

அசல் ஷண்முகம்பொடி விலை ஜாபிதா.

முதல்தரம் ஒரு வீசை ரூ 4-4-0 இரண்டாந்தரம் ரூ 3-4-0

டாக்டர் ஆர். கே. பரிமள மூக்குத்தூள்.

இதனால் ஜலதோஷம், ஒற்றைத்தலைவலி, மண்டைக்குத்தல், உள்படக் கண்டத்திற்கு மேற்பட்ட 103 சகல வியாதிகள் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப் படுமென்பதில் சந்தேகமே கிடையாது. சாலுை சாதா மூக்குத்தூளுடன் இந்தத்தூள் இரண்டொரு சிட்டிகை மாத்திரம் கலந்தால் தூள் முழுதும் சுகந்தமாய்விடும்.

| | விலை | தபால் கூலி | பாக்கிங் | தொகை |
|---|---|---|---|---|
| 3 புட்டி | 0 9 0 | 0 4 0 | 0 1 0 | 0 14 0 |
| 6 புட்டி | 1 2 0 | 0 5 0 | 0 1 0 | 1 8 0 |
| 12 புட்டி | 2 4 0 | 0 8 0 | 0 1 0 | 2 13 0 |

# "கிராம அபிவிருத்தி" (ரூரல் இந்தியா) பஞ்சாங்கம.

சுக்கில ஹூ வைகாசிமீ

| இங்கிலீஷ் | தமிழ் | வாரம் | திதி | நக்ஷத்திரம் | விசேஷங்கள். | |
|---|---|---|---|---|---|---|
| மே 14 | வைகாசி 1 | செ | சஷ் 40-40 | புன 1—3 பூச 56-26 | மழைபெய்யலாம் | சி |
| 15 | 2 | பு | சப் 35-40 | ஆயி 54-40 | தலை கட்டகங்காசப்தமி | சி |
| 16 | 3 | வி | அஷ் 31-22 | மக 52-33 | விதைக்க | அ சி |
| 17 | 4 | வெ | நவ 27-53 | பூர 51-18 | சித்திரமெழுத | சி |
| 18 | 5 | ச | தச 25-27 | உத் 41-11 | கிரஹப் பிரதிஷ்டை | ம |
| 19 | 6 | ஞா | ஏகா 24-13 | ஹஸ் 52-17 | சற்பாதானம் | அ சி |
| 20 | 7 | தி | துவா 24-13 | சித் 54-32 | கரி நாள் பிரதோஷம் | ம. சி |
| 21 | 8 | செ | திர 25-27 | சுவா 58-3 | பிரசுரம் செய்ய | சி. ம |
| 22 | 9 | பு | சதி 27-58 | விசா 60-0 | மருந்துண்ண | சி |
| 23 | 10 | வி | ○ப 31-34 | விசா 2-50 | கிருஹப் பிரவேசம் | சி |
| 24 | 11 | வெ | பிர 35-55 | அது 8-36 | கிரீடம் சூட்ட | சி |
| 25 | 12 | ச | துதி 40-43 | கே 14-38 | வாகனம் மாற்ற | சி |
| 26 | 13 | ஞா | திரு 45-40 | மூல 24-4 | முகூர்த்த நாள் | அ சி |
| 27 | 14 | தி | சது 50-20 | பூரா 27-21 | கிணறு வெட்ட ம அக்னி நக்ஷத்திரம் முடிவு | |
| 28 | 15 | செ | பஞ் 54-21 | உத்ரா 33-8 | கந்தலனம் வைக்க | அ சி |
| 29 | 16 | பு | சஷ் 57-30 | திருவோ 33-8 | கரிநாள் | சி ம |
| 30 | 17 | வி | சப் 59-25 | அவி 42-3 | கரிநாள் | சி ம |
| 31 | 18 | வெ | அஷ் 60-0 | சத 44-42 | | சி |
| 1 | 19 | ச | நவ 59-21 | பூர 46-10 | யோகம் ஆரம்பிக்க | ம சி |
| 2 | 20 | ஞா | தச 57-32 | உத் 46-24 | விவாஹம் | அ |
| 3 | 21 | தி | ஏகா 54-29 | ரே 55-27 | முகூர்த்தம் | சி |
| 4 | 22 | செ | துவா 50-31 | அசு 43-33 | யாகம் செய்ய | சி |
| 5 | 23 | பு | திர 45-48 | பா 45-53 | சுத்திரி கட | சி அ |
| 6 | 24 | வி | சதி 40-27 | கார் 37-33 | மனைவிற்க | ம |
| 7 | 25 | வெ | ● அ34-38 | ரோ 33-44 | வித்தியாப்பியாஸம் | ம சி |
| 8 | 26 | ச | பிர 28-35 | மிரு 29-41 | மாட்டுக் கொட்டில் கட்ட | சி |
| 9 | 27 | ஞா | துதி 22-30 | திருவா 25-36 | மழை பெய்யலாம் | சி |
| 10 | 28 | தி | திரி 16-35 | புன 21-42 | முடி சூட்ட | அ சி |
| 11 | 29 | செ | சது 10-59 | பூச 18-8 | மழை பெய்யலாம் | சி |
| 12 | 30 | பு | பஞ் 4-48 | ஆயி 15-4 | கிணறு வெட்ட | சி |
| 13 | 31 | வி | சஷ் 1-25 சப் 56-15 | மக 12-46 | முகூர்த்தம் பசுவாங்க | சி ம |

## எம்மிடம் வாங்கிப் பாருங்கள்

காணையம், சொல்தவருமல் செய்து கொடுத்தல், சரியான
நகைகள், கெம்புகள், வைரங்கள் இவைகளை நீர்
நாடு வீராளுல் எம்மிடம் ஒரு தடவை
வாங்கிப்பார்த்தால், நாம் செய்கிற
ஸகாயத்தைப்பற்றிநீர் அதிக
திருப்தி யையடைவீர்
என் பதில் சந்
தேகமே
இல்லை.

## எங்களுடைய கருர் விலை

உங்களுக்கு திருப்தியையே கொடுக்கும். வீடுகளில்
உபயோகிக்கக் கூடியவையும், விசேஷகாலங்
களில் வெகுமதியாக கொடுக்க யோக்ய
தையான வெள்ளிப்பாத்திரங்களையும்
நாங்கள் நல்ல வேலைக்காரர்களை
வைத்துக்கொண்டு செய்
கிறோம் ஒரே தடவை
எம்மை பரிக்ஷை
பாருங்கள்.

**ஸூராஜ் மல் லல்லுபாய் அண்டு கோ.,**
**கீர்த்தி பெற்ற வைர வியாபாரிகள்.**

313 எஸ்பிளனேட் : : : : மதராஸ்.



1 JUN 1929
MADRAS

199382



# ரூரல் இந்தியா

(பாரேஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை).

எடிடர் மானேஜர் :—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடைர்ட் டிப்டிகலெக்டர்
ஆபீஸ் : 9, பாரடைஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம். IV. மே, 1929. நெ 5.


## கிராம ஜனங்களின் கடன்களும், அவைகளினல் ஏற்படும் கஷ்டங்களைப் போக்குவதற்காக நிலஅடமான பாங்குகள் ஏற்படவேண்டிய அவசியமும்.

(கனம் ராம்தாஸ் பந்துலு அவர்கள் எழுதியது.)

### 1 பொது விஷயங்கள்.

நமது தேசததில் கிராமங்களில் ஜனங்கள் எப்பொழுதும் கடன்களினல் அவஸ்தைப்படுகிருர்களென்பது எல்லோரும் அறிந்த விஷயமே. அவர்கள் இப்படிக்கடன்களை வைத்துக்கொண்டு கஷ்டப்படுவதோடு வியவஸாயச் செலவுகளுக்காகப் பணமில்லாமலும் தவிக்கிருர்கள். பணமில்லாமையால் அவர்கள் தக்கபடி வியவஸாய முயற்சிகளை நடத்தக்கூடுகிறதில்லை, தானிய விளைச்சல் குறைந்து போகிறது தேசத்தின் தானிய உற்பத்தி ஜனத்தொகைக்கு யோக க்ஷேமத்திற்கே போதாமல் போகிறது. அநேகம் பெயர்கள் ஒரு வேளை சாப்பாட்டைக்கூட அடையக்கூடாமல் தவிக்கிருர்கள். மேலும், விளையும் தானியம் இக்ஷணங்களில் குறைவை யடைகிற படியாலும் அதை வாங்குவதைவிட திறமான இதரதேசத்தில் விளைந்த தானியத்தை உள்நாட்டு ஜனங்களும் வாங்குகிருர்கள். வெளிநாட்டு வியாபாரிகள் மேல்குறித்த காரணத்தினல் கொஞ்சமேனும் நம்முடைய நாட்டு தானியங்களை கவனிக்கிறதேயில்லை. நம்முடைய தேசத்தில் கிராமத்தவர்களின் மொத்தக்கடன் 600 கோடி ரூபாயாக விருக்கிறது. நம்முடைய மாகாணத்தைச் சம்பந்தப்பட்ட மட்டில் கிராமத்தவர்களின் கடன்தொகை 90 கோடி. இப்படி கடன்வந்ததற்குக் காரணங்களைக் கண்டுபிடிக்க வேண்டிய நிமித்தம் ஸர் பிரடரிக்

நிக்கல்ஸனும் இதரர்களும் கமிட்டியாகச்சேர்ந்து சில வருஷங்களுக்கு முன் ஆராய்ச்சி செய்ததில் ஜனங்களின் ஏழ்மையும், சாரமில்லாத நிலங்களும், சரியானபடி மழை பெய்யாமலிருப்பதும், வியவஸாயிகளுக்குச் சரியான வரும்படி வராமலிருப்பதும், ஜனங்களின் அவிவேகமும் அறிவின்மையும், அவர்கள் சக்திக்குமீறி சிலதுறைகளில் செலவு செய்வதும், பிதுரார்ஜிதக் கடன்களும், கடன்வாங்க சௌகரியங்களிருப்பதும், ஜனத்தொகை அளவிற்குமேல் அதிகரிப்பதும், கெடுத்தொந்திரவிற்குப்பயந்து ஜனங்கள் அதிக வட்டி ஏற்பாட்டிற்கு ஒப்புக்கொண்டு பத்திரங்களைப் புதிப்பித்து எழுதிக்கொடுப்பதும், நிலவரிக்கொடுமையும் தான் காரணங்கள் என்று அபிப்பிராயம் கூறினார்கள். ஆனால், அவர்கள் இன்னும் இரண்டு முக்கிய காரணங்களிருப்பதைக் கவனிக்கவில்லை. அவைகளாவன: வியவஸாயிகள் வியவஸாய காலங்கள் தவிர இதர காலங்களில் அநுஷ்டித்து இதர வரும்படிகளை யடைந்து வந்த கைத்தொழில்கள் அவர்களால் இப்பொழுது கைவிடப்பட்டதும், குடும்பங்களில் நிலங்கள் பாகிக்கப்படும் பொழுது அவைகள் சிறிய சிறிய துண்டுகளாக பாகிக்கப்படுவதும்.

பிரிடிஷ்க்காரர்கள் ஆளவருவதற்குமுன்னேயே இந்திய வியவஸாயிகள் இவ்விதமாகக் கடன் காரர்களாக விருந்திருக்கிறார்களென்பது மன்ரோ, எல்பின்ஸ்டன் முதலானவர்களெழுதியிருக்கிற ரிபோர்டுகளிலிருந்து தெறிய வருகிறது. கடன்கள் சென்ற 50 வருடங்களிற்குள் அதிகரித்து விட்டனவென்பதும் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. கடன்களை இருவகைகளாக பிறிக்கப்பட வேண்டும். ஒன்று கடன் வாங்கின துகை வியவஸாய முயர்ச்சிகளில் உபயோகப்படுவது, மற்றொன்று வரும்படி அல்லது லாபம் இவைகளை உத்தேசிக்காமல் அத்துகை உபயோகிக்கபபடுவது. இரண்டாவது வகை கடன்களால்தான் இந்திய கிராமங்களில் வியவஸாயிகள் கஷ்டப்படுகிறார்கள். பிரிடிஷ்காரர்களின் ஆட்சிவந்தபின் ரஸ்தாக்கள் அதிகப்படுத்தப்பட்டன, வியாபாரத்திற்கு சௌகரியங்கள் ஏற்படுத்தப்பட்டன, இவைகளால் தானியங்களின் விலைகள் உயர்ந்தன, சாகுபடி நிலங்களின் விலைகளும் உயர்ந்தன. ஸர்வே, ஸெட்டில்மெண்டு இவைகள் நிலச்சொந்தக்காரர்களுக்குச் சுவாதீன பாத்தியத்தை நிலை நிருத்தியிருக்கிறது. ஆகவே,



வியவஸாயிகளிற்கு கடன் வாங்க சௌகரியங்கள் அதிகரித்து விட்டன. அவர்கள் அதிகக்கடன்களை வாங்குகிறார்கள். வாங்குகிற கடன் துகைகளையும் வியவஸாய முயர்ச்சிகளில் உபயோகியாமல் இதர, லாபகரமில்லாத வழிகளில் உபயோகப் படுத்துகிறார்கள். வியவசாயிகள் இம்மாதிரி நீங்காதகடன்களைச் சுமந்துகொண்டும் அவிவேகத்தில் முழுகிக்கொண்டுமிருக்கிறார்கள்.

இவ்வித சீர்கேட்டை எப்படி ஒழிக்கக்கூடுமென்று பலர் பலவித ஆலோசனைகளைச் செய்கிறார்கள். ஆனபோதிலும், வியவஸாயிகள் அதிகவட்டி விதங்களின் பேரில் கடன்வாங்குவது நிற்கவேண்டும். அவர்கள் யோகக்ஷேமச்சிலவு நிமித்தமாகவும் பயிர்ச்சிலவுகளின் நிமித்தமாகவும் தவிர இதர விஷயங்களிற்காகக் கடன்வாங்கக்கூடாது. கடன் வாங்கின பிறகு அவர்கள் சௌகரியம் போல் கடனைத் தீர்த்துக்கொள்ளும் படியான ஏற்பாடுகள் அவர்களுக்கு அமையவேண்டும். வியவஸாயிகள் கடனை வாங்கும் பக்ஷத்தில் அவர்களின் நிலங்கள் ஜப்திசெய்யப் படக்கூடாதென்ற ஒரு சட்டம் ஏற்படவேண்டும். ஜனத்தொகை நம்முடைய தேசத்தில் அதிகரித்து வருகிறபடியால் அதிகமான நிலங்கள் மேல்மேலும் சாகுபடிக்குக்கொண்டு வரப்படவேண்டும். முக்கியமாக, வியவஸாயிக்கு வேண்டிய மூலதனம் குறைந்த வட்டி ஏற்பாட்டின் பேரிலும், வெகுகால கெடு ஏற்பாட்டின் பேரிலும், அடையப்படும்படியான சௌகரியங்கள் அமையவேண்டும். அவ்விதச்சௌகரியங்கள் ஏற்படாவிட்டால் வியவஸாயம் ஓங்காது, வியவஸாயிகள் முன்னேற்றத்தை யடையமாட்டார்கள், வியவஸாயத்தொழில் லாபகரமாக விருக்காது.

வியவஸாயிகளுக்குப்பணம் இரண்டுவித உபயோகங்களின் நிமித்தம் வேண்டியிருக்கிறது. குறைந்தகால கெடுவின் பேரில்வேண்டிய துகைகள் ஒரு வகை, நீண்டகால கெடுவின் பேரில் வேண்டியது மற்றொருவகை. குறைந்தகால கெடுவின்மேல் வேண்டிய கடன் துகைகள் குடியானவனுடைய பயிர்ச்சிலவு, எரு, விதை வகைரா, இவைகளின் நிமித்தம் வேண்டியதாக விருக்கின்றன. இவ்விதக்கடன்கள் நிலங்களின் வருமானங்களைக் கொண்டு 3 வருஷங்களில் அடைக்கப்படுகின்றன. கூட்டுறவு ஸங்கங்கள் இவ்விதச் சௌகரியங்களைச் செய்யக்கூடும். ஆனால் இவ்விதச்சங்கங்கள் வியவஸாயிகள் அதிக நிலங்களை வாங்குவதற்காகவும், யந்திரங்களை வாங்கி உபயோகிப்ப

தற்காகவும், பெரிய கிணறுகளை வெட்டுவதற்காகவும், கடன் ஒழிம்மை நிவர்த்திக்காகவும் வியவஸாயிகள் வேண்டுகிற பெருந்தொகைகளைக் கொடுக்க முடியாது. இப்பெருந்தொகைகளிற்கு நீண்டகால கெடுக்கள் வேண்டியதாக விருக்கின்றன. எல்லா தேசங்களிலும் மேற்சொல்லிய இருவகைக்கடன்களின் சம்பந்தமாகத் தனித்தனி ஸ்தாபனங்கள் இருக்கின்றன. சென்னை இராஜதானியில் இவ்விருவகைக்கடன்களையும் ஒரேவித கூட்டுறச்சங்கங்கள் கொடுத்து வருகின்றன. அவை அப்படிச்செய்வதால் பலவிதங்களில் அவைகளுக்குக் கஷ்டங்கள் உண்டாகின்றன. கிராமக்கூட்டுறச்சங்கங்கள் நீண்டகால கெடுக்களையுடைய பெருந்தொகைக் கடன்களைக் கொடுக்க முடியாது. நீண்டகாலக்கடன்கள் பல மேனாட்டு தேசங்களில் 30திலிருந்து 70 வருஷத்தவணைகளில் வசூலிக்கப்படுகின்றன. நில அடமான பாங்குகள் தான் இவ்விதக்கடன்களைக் கொடுக்கக் கூடும். நிலஅடமான பாங்குகள் 3 வகைகளில் இருக்கக்கூடும். அவை இராஜாங்க ஸ்தாபனங்களாகவும், இராஜாங்க ஸம்பந்தமுள்ள பொது ஜனஸ்தாபனங்களாகவும், இராஜாங்க ஸம்பந்தமில்லாத இதரஸ்தாபனங்களாகவும் இருக்கலாம். முதல் வகையானது கவர்மெண்டு இலாகாக்களில் ஒன்றாகிறது. அவ்வகை ஸ்தாபனங்களுக்கு கவர்மெண்டின் பணமே உபயோகத்திற்குப் பகுக்கப்படுகிறது. இராஜாங்க சம்பந்தமுள்ள வகையில் இராஜாங்கத்தார் பங்குவைத்துக்கொண்டு நிர்வாஹத்தில் அதிகாரத்தைச் செலுத்தக்கூடும், மூன்றாவது வகையானது ஜாயிண்டு ஸ்டாக்கு கம்பெனிகள்.

ஜர்மெனியில் பிரஷியன் பார்ம் மார்டுகேஜ் கூட்டுறச்சங்கங்கள் என்கிற ஒருவகைநில அடமான பாங்குகளிருக்கின்றன. அவைகள் கடன்வாங்குவோரையே அங்கத்தினர்களாக வஹிக்கின்றன. அவைகளுக்கு மூலதனம் இல்லை. அவைகள் கடன்களை சுவல்பவட்டியின்பேரில் கொடுக்கின்றன. லாப நோக்கத்தை அவைகள் கொள்கிறதில்லை. அங்கத்தினர்கள் ஒரு அல்பத்தொகையை சேர்மானக் கட்டணமாகச் செலுத்துகிறார்கள். இத்தொகை நிலங்களை மதிப்பிட வேண்டிய சிலவுகளுக்கும் இன்னும் இதரச்சிலவுகளுக்கும் உபயோகிக்கப்படுகிறது. வட்டியையுடைய அடமான டிபென்ச்சர் பாண்டுகள் உண்டாக்கப்படு கின்றன. அவைகள் ஜர்மனிதேசம் முழுவதும் சரியான பொருப்பாக ஒப்புக்கொள்ளப்படு கின்றனவாம்.



அமெரிகாவில் பிடரல் பார்ம்லோன் பாங்கென்று இன்னொருவகை நில அடமான பாங்குகள் இருக்கின்றன. இது கூட்டுறவு ஏற்பாட்டைக் கொண்டது. ஜாயிண்டு ஸ்டாக்கு நில அடமான பாங்குகளும் அங்கே வழங்குகின்றன. அவைகள் லாப உத்தேசத்தை வஹிக்கின்றன. ஆனால் அவைகளால் கடன் வாங்குவோருக்காவது டிபென்ச்சர்க்காரர்களுக்காவது யாதொரு கஷ்டமும் விளைகிறதில்லை. எகிப்து தேசத்திலுள்ள வியவஸாய பாங்குகளும் மேற்கூறியவகையைப் போன்றவை.

இன்னும் அநேக விதநில அடமானபாங்குகள் பல தேசங்களில் இருந்து வருகின்றன. நம்முடைய தேசத்திற்கேற்றபடி ஏற்பட வேண்டிய நில அடமான பாங்குகளைப்பற்றி அடுத்த வியாஸத்தில் விவரிக்கப் போகிறேன்.

## வியவஸாயத்திற்குக் காடுகளின் உபயோகம்.

(பத்திராசிரியரின் வியாஸம்)

எந்ததேசத்திலும் அதன் செல்வநிலையும் நாகரீகமும் அதன் மண்வளத்தையும் நீர்வளத்தையும் பொருத்திருக்கின்றன. காடுகள் அழிந்துபோனால் மிருகங்களும், மீன்களும் அற்றுப்போய் விடுகின்றன, தான்யங்கள் விளைகிறதில்லை, புசாரம் குறைகிறது, ஆடுமாடுகள் க்ஷீணித்து விடுகின்றன, வெள்ளங்கள் உண்டாகின்றன, பஞ்சமும், வியாதிகளும் உண்டாகின்றன. அடர்ந்த காடுகள் ஒருதேசத்தில் இருந்தால், அவைகள் மழைஜலத்தில் முக்கால் பாகத்தை கிரஹிக்கின்றன. காடுகள் அழிக்கப்பட்டால் முக்கால் பங்கிற்கு மேல்பட்ட மழைஜலம் நல்ல மண்ணையுமடித்துக்கொண்டு ஓடிப்போகிறது. பயிர் நிலங்களின் செழுமை அக்காரணத்தினால் போய் விடுகிறது.

முன்காலத்தில் ரோமர்களுடைய இராஜ்ஜியத்தைச் சேர்ந்த ஆப்ரிகா கண்டத்தின் வடபாகங்களில் காடுகள் அழிக்கப்பட்டதினால் அந்த இராஜ்யத்தின் செல்வநிலை குறைவை யடைந்ததாம் ஏனென்றால், அப்பிரதேசங்களில் தான் ரோமர்களுடைய இராஜ்ஜியத்திற்கு வேண்டிய தானியவகைகள் விளைக்கப்பட்டனவாம். காடுகளழிக்கப் பட்டமையால் தானியவிளைச்சல் குறைவு [illegible]

விட்டது. பாலஸ்தீன், மெஸபொடேமியா, லிபியா, சீனா, இத்தேசங்களிலும் காடுகளழிக்கப்பட்டபிறகு தானியவிளைச்சல் குறைவையடைந்தது. காடுகள் மறுபடியும் உண்டாக்கப்பட்ட பின்பு சில தேசங்களில் விளைச்சல் அதிகரித்திருக்கிறது. மத்திய ஆசியாவில் டார்டரி என்கிற தேசம் 1826இல் தோட்டங்களையும் வயல்களையும் ஆறுகளையும், கால்வாய்களையும் ஏரிகளையுமுள்ள தேசமாகவிருந்தது. 1876இல் காடுகளழிக்கப்பட்ட பின்பு அது வனாந்தரமாக ஆகிவிட்டது. ஹிமயமலையின் ஒரு பக்கத்திலுள்ள தேசம் அதில் காடுகள் அழிக்கப்பட்டமையால் வனாந்தரமாக ஆகிவிட்டது, அம்மலையின் மற்றொரு பக்கத்தில் காடுகள் அடர்ந்திருக்கிறபடியால், அப்பக்கத்திலுள்ள தேசம் ஆறுகளுடனும் அதிகமான பெரிய விருக்ஷங்களுடனும், அதிக ஜனதொகையுடனுமிருக்கிறது. ஐரோப்பா கண்டத்தில் அநேக தேசங்களில் காடுகளழிக்கப் பட்டகாலத்திற்கு முன்பு ஆறுகளில் கப்பல்கள் கூட போகக்கூடுமாம். அமெரிகாவில் கவர்மெண்டார் காடுகளின் ஸம்ரக்ஷணநிமித்தமாக அநேக ஏற்பாடுகளைச் செய்கிறார்களாம். நைல் நதி டெல்டாவில் ஆதியில் விருக்ஷங்களில்லாமலிருந்தனவாம். அக்காலத்தில் அந்தப்பிரதேசத்தின் வெள்ளாமை குறைவாகவிருந்ததாம். யூகலிப்டஸ் விருக்ஷங்கள் பிறகு அதிகமாக நடப்பட்டனவாம். பின்பு அப்பிரதேசத்தின் வெள்ளாமை உயர்ந்ததாம். மூன்றாவது நெப்போலியனும் ஆல்ஜீரியாவில் யூகலிப்டஸ் விருக்ஷங்களை அதிகமாக நட்டு அந்த தேசத்தின் வெள்ளாமையையுயர்த்தினானாம். பாலாரில் நீர் அதிகமாக செல்லாததற்குக் காரணம ரெயில்வேயிக்கு விறகு சப்பளைக்காக கங்குந்தி ஜமீனில் காடுகளழிக்கப்பட்டதுதான் என்று பாரெஸ்டு அதிகாரியாகவிருந்த மிஸ்டர் பிராண்டிஸ் கூறுகிறார். நீலகிரியின் சமபந்தமான மழை விவரப் பத்திரங்களில் விருக்ஷங்கள் அதிகமாக விருந்தால் அதிகமழை பெய்கிறதென்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. 1870க்கு முன்பு உதகமண்டலத்தல் விருக்ஷங்களேயில்லை, 1879இல் விருக்ஷங்கள் நடப்பட்டன. 1870-74ஆகிய 5 வருஷங்களில் வருஷந்தோறும் மார்ச்சிலிருந்து மேவரையில் 121 நாள்களில் மழை பெய்தது. 1886-90 ஆகிய 5வருஷங்களில் அதேமாதங்களில் மழைநாட்கள் பிரதி வருஷமும் 147க்குறையாமலிருந்தனவாம்; மரங்களில்லாத காலத்தில் மற்ற மாதங்களில் 374 மழைதினங்கள் [illegible]னிருந்தன. விருக்ஷங்கள் நடப்பட்ட பிறகு 416 மழைதினங்களிற்கு குறையாமலிருந்து வருகின்றன.



## கிராமச்சீரமைப்பு முயற்சிகளில் 6 துறைகள்.

(எஸ். வி. ராமமூர்த்தி, ஐ. ஸி. எஸ். அவர்கள் எழுதியது.)

நம்முடைய தேசத்திலும் இதர தேசங்களில்ப் போலவே சமூக வாழ்வு என்பது பல குடும்பங்களின் கூட்டுவாழ்வாக விருக்கிறது. மேல் நாட்டில் சமூகவாழ்வானது குடும்பங்களிலிருந்து பிறிந்த தனி நபர்களின் கூட்டுவாழ்வாக விருக்கிறது. நமது தேசத்திலும் மேநாட்டுக்கல்வி பரவுவதாலும், பிரயாண வஸதிகள் அதிகரிப்பதாலும் குடும்பங்கள் கலைந்து போகின்றன. அவனவன் தான் முன்னுக்கு வரவேண்டுமென்று கருதுவதும், தனித்தனியாக சம்பாதித்து நன்றாயிருக்க வேண்டுமென்று எண்ணிப்பல தேசங்களிற்குச் செல்வதும் குடும்பங்கள் கலைவதைச் செய்கின்றன. ஆனபோதிலும், குடும்பப்பாசமானது இன்னும் ஜனங்களால் கைவிடப்படவில்லை. எப்படியிருந்தபோதிலும், குடும்பத்திலிருந்து பிறிந்து சம்பாதித்து முன்னுக்குவரவேண்டுமென்கிற உணர்ச்சி எல்லோர் மனதிலும் ஓங்கிவளர்ந்து வருகிறது. குடும்பங்களோடு ஒட்டிக்கொண்டே சம்பாதித்து முன்னுக்கு வரவேண்டுமென்கிற உணர்ச்சி இன்னும் ஏற்படவில்லை. 50 வருஷங்களிற்கு முன்பு ஐரோப்பிய துரைத்தனத்தார் நம்முடைய கிராமங்களில் பஞ்சாயத்துகள் இருந்து அதிகாரத்தை வஹித்து வந்ததின் அடையாளங்களைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். தற்காலத்திலோ பஞ்சாயத்துகள் சென்னையில்மாத்திரம் தான் இருந்துகொண்டிருக்கின்றனறன. இதர மாஹாணங்களில் அவைகள் ஒங்கவில்லை. பஞ்சாயத்துகள் கிராமங்களில் சரியாக அமைந்தால் அவைகள் கூட்டு வாழ்வு விஷயமாகவும், செல்வநிலை விஷயமாகவும், இராஜீய விஷயமாகவும் மிகவும் உயர்வான வேலைகளைச்செய்யக்கூடும்.

ஜப்பான் தேசமானது இராஜீய விஷய முன்னேற்றத்திற்கும் ஆசாரசீர்திருத்திற்கும் பாடுபட்டதோடு செல்வ நிலையை உயர்த்துவதற்கும் பாடு பட்டு வந்தது. நமது தேசம் செல்வ நிலை விஷயத்தைக்கவனிக்க வேயில்லை. இன்னமும் ஜப்பான் தேசத்தில் ஜனத்தொகையில் பாதிப்பெயர்கள் வியவஸாயத்தையே ஜீவனமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தேசத்தில் குடியானவர்கள் பாதிகாலத்தை வேலையில்லாமல் கழிக்கிறார்கள். ஜப்பானில் ஸஹாயத்தொழில்கள் அதிகமாக வியவஸாயிகளால் நடத்தப்படுகின்

றன. பட்டுவேலை, கைத்தறிநெசவு கூடைபின்னுவது, இவ்வித ஸஹாயத்தொழில்கள் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக நடத்தப்படுகின்றன. மின்சாரமானது அத்தொழில் முயற்சிகளிற்கு உபயோகிக்கப்படுகிறது. நமதுதேசத்திலும் இவ்விதமாக ஸஹாயத்தொழில்கள் அமைந்தாலொழிய வியவஸாயிகள் முன்னுக்கு வரமாட்டார்கள். பட்டணங்களில் படித்தவர்களின் சங்கியை அதிகரித்திருக்கிறபடியால் அவர்களும் ஸஹாயத்தொழில்களை அப்பியஸித்து வரும்படிகளை அடையவேண்டியது அவசியமாயிருக்கிறது.

பட்டணங்களில் சுகாதார ஏற்பாடுகள் சரியானபடி அமைக்கப்பட்டிருக்கின்றன. கிராமங்களில் ஒரு வித ஏற்பாடும்கிடையாது, அவைகளில் நோய்கள் உண்டாகாதபடி இருக்கவேண்டியதற்கு முயர்ச்சிகள் எடுத்துக்கொள்ளப் படவில்லை. படித்த பட்டணத்து ஜனங்கள் கிராமவாஸிகளுக்கு சுகாதாரவழிகளில் போதனைகளைச் செய்யவேண்டும்.

நமது தேசத்தில் ஜனங்கள் வீட்டில் ஒருவித வாழ்வில் வளர்ந்து வருகிறார்கள். மேநாட்டுப்படிப்பை போதிக்கிற பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் மேநாட்டு வாழ்வில் ருசியை அவர்களுக்கு உண்டாக்குகிறார்கள்.

இந்தியர்கள் பலவிதமுயற்சிகளிலும் உற்சாகத்தை வளர்க்க வேண்டும். உதாரணமாக, இந்தியாவில் கிராமங்களில் ரஸ்தாக்களைப்போடுவது பணமில்லாமையால் நடத்தப்படாமலிருக்கவில்லை. கிராமஜனங்கள் அவ்வித வேலையில் சிரத்தையையும் உற்சாகத்தையும் வளர்த்தால் அவ்வேலை நடந்துவருமென்பதில் சந்தேகமேயில்லை.

ஆகவே, கிராமச்சீரமைப்பு முயர்ச்சிகள் 6 துறைகளில் நடத்தப்படவேண்டும். ஜனங்கள் வெறும் பேச்சோடு இனி இருக்கக்கூடாது அவர்கள் இம்முயர்ச்சிகளை ஆவலுடன் கைப்பற்ற வேண்டும்.

## ஸமூக ஊழியம்.

[மிஸ்டர் டி. எஸ். கங்காதர ஐயர் பி. ஏ, பி. எல் அவர்கள் எழுதியது]

ஸமூக ஊழியம் வெகு உயர்வான ஊழிய மென்பதில் சந்தேகமில்லை. ஸமூக ஊழியத்தில் ஜாதி, மத இராஜீயக்கக்ஷி பேதங்கள் கிடையாது ஸகல ஜனங்களும் ஓரே வகுப்பு ஜனங்களென்பது அவ்



வூழியத்தின் உணர்ச்சி. ஸமூக ஊழியமானது ஊழியர்களுக்கு சந்தோஷத்தைக்கொடுக்கிறது. அவர்களின் ஊழியத்தினால் ஜனங்களும் நன்மையை யடைகிறார்கள். சமூக ஊழியர்களும், தாழ்ந்த வகுப்பு ஜனங்களும் ஒருவருக்கொருவர் அன்பு ஆதரவுடன் இருக்கிறார்கள். சமூக ஊழியர்கள் சமூகத்திலிருக்கிற கெட்டுப்போனத்தனிநபர்களை சுகஸ்திதிக்குக் கொண்டுவருவதால் தேசத்தையே உயர்த்துகிறார்களென்பதில் சந்தேகமில்லை. அவர்களுடைய நோக்கமானது சமூகம் செல்வத்திலும், சுகத்திலும் உயரவேண்டுமென்பதுதான்.

நம்முடையதேசத்தில் சமூகச்சீர்கேடுகள் பலவிதங்களிலிருக்கிறபடியால் படித்தவாலிபர்கள் சமூகநன்மை ஊழியத்தைக் கைக்கொள்ள வேண்டும். ஜாதிபேதங்களும், தீண்டாதவர்களென்கிற வகுப்பு ஒன்றிருப்பதும் மதுபானவழக்கமும், மூடத்தனமாக சில வழக்கங்கள் அப்பியஸிக்கப்படுவதும் நம்முடைய தேசத்தின் அபிவிருத்தியைத்தடை செய்கின்றன. ஆகவே, படித்த வாலிபர்கள் ஸமூகநன்மை ஊழியத்தை உற்சாகத்துடன் நடத்த வேண்டும். தொழிலாளி வர்க்கத்தவரினும், தாழ்ந்த வகுப்பினரினும் முன்னேற்றத்தின் பொருட்டும் வியவஸாயிகளின் முன்னேற்றத்தின் பொருட்டும், கர்ப்பிணி ஸ்திரீகளுக்கு வைத்திய ஸஹாயத்தின் பொருட்டும், குடியை ஒழிப்பதற்காகவும், சுகாதாரச்சௌகரியங்கள் ஏற்படுவதற்காகவும் அவர்கள் உழைக்க வேண்டும். அவர்கள் கிராமச்சீரமைப்புத்துறைகளிலும் வேலையைச்செய்ய வேண்டும்.

---

## வேண்டும்

மனதில் உறுதி வேண்டும்
வாக்கினிலே இனிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்
கனவு மெய்ப்பட வேண்டும்
கைவசம் ஆவது விரைவில் வேண்டும்
தனமும் இன்பமும் வேண்டும்
தரணியிலே பெருமை வேண்டும்
கண் திறந்திட வேண்டும்
காரியத்தில் உறுதி வேண்டும்
பெரிய கடவுள் காக்க வேண்டும்

வானகம் இங்கு தென்பட வேண்டும்
உண்மை நின்றிட வேண்டும்

## செடிவர்க்கங்களின் விஷயங்கள்.

[ம. ரா. ரா. ஸ்ரீ டி. வி. சுவாமிநாத ஐயர் அவர்கள் எழுதியது]

(90-ம் பக்கத்திலிருந்து தொடர்ச்சி)

### அத்தியாயம் IV. செடிகள் எப்படி ஆகாரங்களைப் புசிக்கின்றன.

முந்திய அத்தியாயத்தில் செடிகள் ஒன்றைப்போல் ஒன்று இல்லாமல் வித்தியாஸங்களோடிருக்கின்றனவென்பதைப்பற்றி விவரித்தோமல்லவா? அவைகளுள் வர்க்கங்களும் வகைகளும் எப்படி உண்டாயினவென்பதை இந்த அத்தியாயத்தில் சொல்வோம். செடிகள் எப்படி உணவுகளைப் புசிக்கின்றன, நீர்ப்பானஞ் செய்கின்றன, கல்யாணஞ் செய்துகொண்டு குடும்பவிருத்தியைச் செய்துகொள்கின்றனவென்கிற விஷயங்களை அறிந்துகொள்வோம், பிறகு வர்க்கங்கள் ஏற்படுகிறதைப்பற்றி அறியமுயலுவோம்.

செடிகள், அதாவது உயர்தரச்செடிகள். எவ்விதமாகப்புசிக்கின்றன? அவைகள் தங்களுடைய இலைகளின் மூலமாகத்தான் உணவை உட்கொள்ளுகின்றன; இலைகள் அவைகளுக்கு வாய்களும், தீனிப்பைகளுமாக ஏற்பட்டிருக்கின்றன. சாதாரணமாய் இலைகள் பச்சைவர்ணமாகவும் தட்டையாயும், காம்புகள் தளங்கள் என்கிற இரண்டுபாகங்களை யுடைத்தாயுமிருக்கின்றன வல்லவா? அவைகள் தட்டையாகவும் அகண்டுமிருப்பது சூர்ய வெளிச்சத்தை வேண்டிய வரையில் கிரஹிப்பதற்காகத்தான்; அவைகள் சுற்றியிருக்கும் வாயுவிலிருந்து கார்பானிக் ஆஸிடை கிரஹித்துச் சூர்ய வெளிச்சத்தின் ஒத்தாசையால் அதை ஜீர்ணித்துக்கொள்கின்றன. செடிகளின் வர்க்க வகைகளின் பழக்கங்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் யேற்றபடி அவைகளின் இலைகள் அமைகின்றன.

செடிகளைச் சூழ்ந்திருக்கும் வாயுவில் கார்பானிக் ஆஸிட் என்கிற ஆவிபறந்து கொண்டிருக்கிறது, இதைகிரஹிப்பதற்காகச் செடிகள் ஒன்றோடொன்று சண்டையிடுகின்றன. செடிகள் மண்ணின் ஸாரத்தைக்கிரஹித்து வளர்கின்றனவென்று ஜனங்கள் சொல்கிறார்கள். அது சரியல்ல. பூமியிலிருந்து அவைகள் அடையும் சத்து வெகு



அல்பமானது. அவைகள் வாயுவிலிருந்து அடைகிற கார்பனும். நீரிலிருந்து அடைகிற ஹைட்ரொஜனும் ஆக்ஸிஜனும் தான் அவைகள் வளருவதற்கு ஆதாரமாகவிருக்கின்றன. ஒரு செடியை நன்றாய் உலர்த்திவிட்டு அதைக்கொளுத்திப்பாருங்கள். சற்று நேரத்திற்குள் கொஞ்சம் சாம்பல் மாத்திரம் தான் நிற்கிறது மற்ற வஸ்துக்களெல்லாம் ஆவியாகி வாயுமண்டலத்தை யடைகின்றன; கார்பன் ஆக்ஸிஜனோடு சேர்ந்து கார்பானிக் ஆஸிட் ஏற்படுகிறது; ஹைட்ரொஜன் ஆக்ஸிஜனோடு சேர்ந்து நீராவி உண்டாகிறது. சாம்பல் ஒன்றேதான் செடி பூமியிலிருந்து கிரஹித்த வஸ்துவாகிறது. ஆகவே, செடி வளருவதற்கு அது உட்கொண்ட வாயுவும், நீரும்தான் ஆதாரங்களென்பதை எல்லோரும் அறியவேண்டும்.

செடிகள் தங்களுடைய இலைகளின் மூலமாக கார்பானிக் ஆஸிட் என்கிற ஆவியை வாயுவிலிருந்து கிரஹிக்கின்றனவென்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. இலைகள் எப்படி அதைக்கிரஹித்துப் புசித்து ஜீர்ணித்துக்கொள்கின்றனவென்பதை விவரிப்போம். ஒரு இலையைக் கத்தியால் துண்டுசெய்து நீங்கள் மைக்ரொஸ்கோபில் வைத்துப் பார்ப்பீர்களாகில் இலையின்மேல் பாகத்தில் நீர்த்துளிகள் நிறைந்த பைகளைப் பார்ப்பீர்கள். அப்பைகள்தான் வாயுவிலுள்ள கார்பானிக் ஆஸிடை உறிஞ்சி அதை அவைகளிலுள்ள நீர்த்துளிகளில் கலந்துவிடுகின்றன. இலைத்துண்டில் இப்பைகளுக்கு அடுத்தபடியாக பச்சையான வஸ்துவையுடைய பச்சைப்பைகளிருப்பதைக் காண்பீர்கள். இப்பச்சைப் பைகள் மேற்கூறிய நீர்ப்பைகளிலிருந்து கார்பானிக் ஆஸிடை எடுத்துக்கொண்டு அவைகளிலிருந்து தாங்கள் வளரவேண்டியதற்கு அவசியமான வஸ்துக்களாகிய சர்க்கரைகள், ஸ்டார்ச்சுகள், முதலியவைகளைச் செய்துகொள்கின்றன. பச்சைப் பாகத்தின் அடியில் இன்னொரு வகைபைகள் இருக்கின்றன. அவைகள் அதிகப்பட்ட நீரை உலர்த்திவிடுகின்றன.

மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் ஒரேவாயும் வயிருமிருக்கும்போது செடிவர்க்கங்கள் அநேக வாய்களையும் வயிறுகளுமாகிய இலைகளை ஏன் உடைத்தாயிருக்கின்றன? அவைகள் ஆகாரத்தைத் தேடுவதற்காக இடத்தை விட்டு நகரக்கூடுகிறதில்லை யாதலாலும், அவைகளின் ஆகாரம் ஆவிரூபமாக ஆகாயத்தில் சிறிது சிறிதாக

பறவிக்கிடக்கிறபடியாலும், அவைகள் அவ்வாகாரத்தை எட்டினமட்டில் உறியவேண்டியதாக விருக்கிறபடியாலும், அவைகள் பல வாய்களையும் வயிறுகளையும் உடைத்தாயிருக்கின்றன.

இலைகளில் உள்ள பச்சைவஸ்துதான் செடிகளில் உயிர்வஸ்து. அதுதான் பிரபஞ்சத்திலுள்ள ஸகல ஜீவகோடிகளுக்கும் உயிர்மூலம். இந்த பச்சைவஸ்து சூர்யவெளிச்சத்தின் ஒத்தாசையினால் மெல்லிய சதைபோன்ற இன்னொரு வஸ்துவைத்தயாரிக்கிறது. நம்முடைய சரீரங்களும், மிருகங்களின் சரீரங்களும் செடிகளின் சரீரங்களும் அந்த வஸ்துவினால்தான் கட்டப்படுகின்றன. இலைகளிலுள்ள பச்சை வஸ்துவிற்கு கிளாரபில் என்று பெயர். கிளாரபில்லானது சூர்ய வெளிச்சம் இலையின்மேல்விழும்பொழுது தன்னோடு கலந்துள்ள கார்பானிக் அஸிடிலிருந்தும் நீரிலிருந்தும் ஆக்ஸிஜனைப் பிறித்து வாயுமண்டலத்திற்கனுப்பிவிட்டு மீந்த கார்பனையும் ஹைட்ரொஜனையும் சேர்த்து ஸ்டார்ச்சென்கிற, சூடு, சலனம் இவைகளை உண்டுபண்ணக்கூடிய சக்தியைவஹிக்கிற பொருளை உண்டாக்குகிறது. ஆகவே, மேற்சொல்லிய ஸ்டார்ச்சு என்கிற பொருளில் சூடும் சலனசக்தியும் மறைந்திருக்கின்றன. அதை நாம் சாப்பிடுகிறோம், பின்பு அது நம்முடைய சரீரத்தில் எரிந்து விடுகிறது. ஸ்டார்ச்சுமாத்திரமேயல்லாமல் கார்போஹைட்ரேட்ஸ் என்றும், ஹைட்ரோகார்பன்கள் என்றும் இதர வஸ்துக்களும் வெய்யல் இலைகளின்மேல் விழும்பொழுது கிளாரபில்களால் தயாரிக்கப்படுகின்றன. இவைகளும் ஸ்டார்ச்சைப்போலவே செடிகளின் சரீரங்களிற்கு முக்கியமான பொருள்கள். இவ்விதமாக உண்டாக்கப்பட்ட ஸ்டார்ச்சுகளும், சர்க்கரைகளும் செடிகளின் தண்டுகளிலுள்ள சாரில் கரைந்து போகின்றன. செடிகள் மேல்கொண்டு வளருவதற்கும் இலைகளையுண்டாக்குவதற்கும் கரைந்துள்ள ஸ்டார்ச்சு முதலிய பொருள்கள் உபயோகப்படுகின்றன.

இலைகள் செடிகளுக்கு எவ்வளவு அவசியமான அங்கங்களென்பதை நீங்கள் இப்பொழுது நன்றாய் உணர்வீர்கள். அநேகச் செடிகளில் இலைகள் பூக்களுடன் கொத்துக்கொத்தாக நிறைந்திருப்பதை எல்லோரும் கவனித்திருப்பீர்கள். இலைகள் பலவித பேதங்களை ஏன் அடைகின்றனவென்பதை அறிய முயலுவோம்



வாயுவிலிருந்து கார்பனைக் கிரஹிப்பதற்காக அவைகள் அகண்டும் தட்டையாயுமிருப்பதோடு, சூர்ய வெளிச்சத்தைக் கிரஹிப்பதற்காக அவைகள் மல்லாந்து படுத்தாப்போலும் அமைந்திருக்கின்றன. சில செடிகள் உயரமாய் வளர்ந்து இலைகளை தட்டையாகவும் படுத்தாப்போலும் வஹிப்பதை நீங்கள் காண்பீர்கள். சூர்ய வெளிச்சத்தைக் கிரஹிப்பதற்காகதான் அவைகள் அப்படி இருக்கின்றன. முட்காடுகளிலும் வேலிகளிலும் வளருகிற செடிவர்க்கங்கள் நெருங்கியிருக்கவேண்டிய காரணத்தினால் ஒன்றோடொன்று சண்டையிட்டுக்கொண்டு வாயுவையும் சூர்யவெளிச்சத்தையும் அடைகின்றன. இப்படிப்பட்ட இடங்களில் தக்கவாறு இலைகளை வஹிக்கிற செடிகள் இடத்திற்கேற்றபடி அமைகின்றன. எங்கெந்தச்செடிகள் இவ்விதமாகக் குறைந்த வாயுவிற்கும், சூர்ய வெளிச்சத்திற்கும் எற்றபடி வளரக்கூடுகிறதில்லையோ அவைகளின்வகைகள் காலக்கிரமத்தில் அழிந்து போகின்றன.

எங்கெங்கே செடிகள் பெரியவைகளாகவும் நெருக்கமாயில்லாமலும், விசாலமான ஸ்தலங்களிலிருந்து கொண்டும் உயர்ந்து வளர்கின்றனவோ, அங்கேயெல்லாம் அச்செடிகள் புகையிலைச்செடியின் இலைகளைப்போலவும் சூர்ய காந்திச் செடிகளின் இலைகளைப்போலவும் விசாலமான அகண்ட இலைகளை வஹிக்கின்றன. மைதானங்களில் நெருக்கமாயிருந்து கொண்டு வளருகிற செடிகள் குறுகிய, நீண்ட புல்போன்ற இலைகளை வஹிக்கின்றன. சில முள்செடிப்புதர்களில் செடிகளின் இலைகள் பலபாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒரே செடியிலேயே தண்டைச்சுற்றி இலைகள் ஒன்றுக்கு ஒன்று அசௌகரியப்படுத்தாதபடி உண்டாயிருப்பதையும் நாம் காண்கிறோம். குறுகிய இலைகளும், பாகங்களை வஹிக்கிற இலைகளும், செடிகளில் இலைகளின் ஒழுங்கும் வெய்யலையடைவதற்கும், வாயுவை கிரஹிப்பதற்கும் அவைகளின் பிரதேசங்களின் சௌகரியங்களையொத்து எற்பட்டு இருக்கின்றன.

தரையிலோ அல்லது நீரிலோ எச்செடிகள் விசாலமான இடசௌகரியத்துடனும், தடுக்கப்படாத வாயு சௌகரியத்துடனும் வளரக்கூடுகின்றனவோ அவைகளெல்லாம் அகண்ட, வட்டமான, மத்தியில் நீண்ட காம்புகளையுடைய இலைகளை வஹிக்கின்றன. எச்செடிகளில் இலைகள் பல பாகங்களாக பாகிக்கப்

பட்டிருக்கின்றனவோ அவைகள் நிலத்தில் வளர்ந்தபோதிலும் சரி, நீரில் வளர்ந்தபோதிலும் சரி, அவைகள் முன் சொல்லப்பட்ட செடிகளைப்போலல்லாமல் வாயுவை அடைகிற வழியில் அசௌகரியங்களை உடைத்தாயிருப்பதால் அவைகளின் இலைகள் அவ்வாறு ஏற்படுகின்றன.

வெய்யிலைக் கிரஹிப்பதற்கு ஸந்தர்பங்களுக்கேற்றபடி செடிகள் இலைகளில் நரம்புகளை நிர்மாணித்துக் கொள்ளுகின்றன. அழுகிக்கிடக்கும் இலைகளில் இவ்வித நரம்பு அமைப்பு நன்றாய்க் காணப்படும். இந்நரம்பு அமைப்பு மிருகங்களிற்கு எலும்புக்கூடுகளைப்போலவே. செடிகளின் இலைகளுக்கு உருவ அமைப்பை ஏற்படுத்துகிறது. பச்சை வஸ்து நரம்புகளிற்கிடையில் அடைகிறது. சூர்ய வெளிச்சத்தைக் கிரஹிப்பதற்காக இலைகள் எப்படி நிற்கவேண்டுமோ அப்படி அவைகள் நின்றுகொள்ள வேண்டியபடி நரம்பு அமைப்புச்செடிகளில் ஏற்படுகிறது.

இலைகளின் நரம்பு அமைப்பு மூன்றுவகைகளாகவிருக்கின்றன, ஒரு வகுப்பு விரல்போன்ற அமைப்பு, இன்னொரு வகுப்பு இறகைப்போன்றது, மூன்றாவது வகுப்பு தண்டவாள அமைப்பு, அதாவது, இலையின் மத்தியிலிருந்து தண்டவாளங்களைப்போல் ஸம இடைவெளியுடனே நரம்புகள் இரண்டுபக்கங்களிலும் செல்கின்றன.

விரல்ப்போன்ற வகையில் நரம்புகளுக்கு இடையில் பச்சை வஸ்து அடர்ந்திருக்கின்றது. இலைகள் வட்டமாகவும், இல்லாவிட்டால் அநேக முனைகளுடனும் ஏற்படுகின்றன.

செடிகளில் வித்தியாஸங்கள் அவைகள் வளரும் ஸ்தலங்களிற்கேற்றப்படி உண்டாகின்றன. படருகிற செடிகளில் இலைகள் ஒன்றின் எதிரில் ஒன்றாக கொடியின் இருபக்கங்களிலும் இருப்பதும், அவைகள் அடிபாகத்தில் தட்டையாயிருப்பதும், அவைகள் மரத்தையோ, சுவரையோ அல்லது ஏதாவது கொம்பையோ பிடித்துக்கொண்டு வளரவேண்டிய நிமித்தம் தான்; காடுகளில் உள்ளபெரிய விருக்ஷங்களின் இலைகள் முட்டை போன்ற வடிவத்தையுடைத்தாயிருக்கின்றன; எலுமிச்சைவகைராச் செடிகளில் இலைகள் ஒரு பக்கம் குறுகியிருப்பது ஒன்று மற்றொன்றை சூர்ய வெளிச்சத்திலிருந்து மறைக்காமலிருக்க வேண்டியதற்குத்தான்.



செடிகள் தங்களை மனிதர்களும் மிருகங்களும் தொடாதபடி இருக்கவேண்டிய நிமித்தம்முள்நிறைந்த இலைகளை வஹிக்கின்றன. இலைாவிட்டால் தொடுகிறவர்களுக்கு அரிப்பு எரிவு இவைகளை யுண்டாக்குகின்றன.

இலைகளைப்பற்றிச் சொல்லும்பொழுது இன்னும் இதரமான சங்கதிகளைச் சொல்லவேண்டியிருக்கிறது. ஆதிச்செடிகள் ஒரே ஸெல்லையுடையவைகளென்று முந்தியே சொன்னோம். அந்த ஸெல்லே அச்செடிகளுக்கு இலையாகவும், பூவாகவும், விரையாகவும், வேராகவும் அமைந்திருக்கிறது. கீழ்த்தரச் செடிகள் ஒரே ஸெல்லைக்கொண்டு அநேக உருப்புகளால் நடக்கவேண்டிய வேலைகளையெல்லால் நடத்திக்கொள்கின்றன. செடிகள் வகுப்பில் உயர, உயர, அவைகளில் ஒவ்வொரு வேலைக்கு தனித்தனி அவயவம் ஏற்படுவதை நாம் பார்க்கிறோம். இப்படி ஒரே ஸெல்லையுடைய செடிவகுப்பிற்கு மேல்பட்டதாக, ஸெல்கள் ஒன்றோடொன்று தொட்டுக்கொண்டு மயிர்போன்ற ஓர்விதப்பாசிவகையாக குட்டைகளில் இருப்பதைபார்க்கிறோம். இதற்கும்மேல்வகுப்பானது ஸெல் இலையைப்போல அமைந்த sea weed என்கிற சமுத்திரப்பாசிவர்க்கம். இவர்க்கங்களில் நரம்பு கிடையாது. இதற்கும் மேல்பட்ட வகைதான் நரம்புள்ள இலைகளையும், சட்டைபாய்ந்த தண்டுகளையும் கிளைகளையுமுடைய செடிகளும் மரங்களும்.

ஆகவே, உயர்தரச்செடிகள் ஆகாரத்தைப் புசித்து ஜீர்ணிக்கிறதற்காக இலைகளையும், நீரைக்குடிப்பதற்காக வேர்களையும், பிரஜோத்பத்தி முயர்ச்சிகளுக்காகப் புஷ்பங்களையும், பூச்சிகளை மோஹித்து வரவழைக்கிறதற்காக அவைகளின் தேன்பாகங்களையும், வகிக்கின்றன. இலைகள் மாத்திரமேயல்லாமல் செடிகளின் எல்லாப்பாகங்களும் கார்பானிக் ஆஸிடை கிரகிக்கிற சக்தியை உடைத்தாயிருக்கின்றன. அநேக பெரிய மரங்களில் கார்பானிக் ஆஸிடை கிரகிக்கிற வேலை மரத்தண்டின் பட்டைகளினாலேயே செய்யப்படுகிறது. பட்டைகளில் கிளோரபில் இருக்கிறபடியால் அவைகளால் கார்பானிக் ஆஸிடை கிரஹிக்கிற வேலை செய்யப்படுகிறது.

காட்டுப்பிரதேசங்களிலும், வனாந்தரங்களிலும் மரங்களின் பட்டைகள் சதை நிறைந்தும், இலைகள் முரடாகவும் சதை நிறைந்து

19938

யிருப்பதை எவரும் காணக்கூடும். இப்பிரதேசங்களில் மரப்பட்டைகள்தான் கார்பானிக் ஆஸிடைக்கிரகிக்கிற வேலையை யதிகமாய்ச் செய்கின்றன.

சில செடிவகைகளின் வாழ்நாள் ஒருவருஷமாக விருக்கிறது. அவ்வகைகள் புஷ்பித்துக்காய்த்து விதைகளையுண்டாக்கியபின்பு உலர்ந்துபோகின்றன. ஆனால் சில செடிகள் வெகுகாலம் வளர்கின்றன. அச்செடிகள் குளிர்காலம் வரும்போது இலைகளை உதிர்த்து விடுகின்றன. ஆனபோதிலும் அவைகள் இலைகளின் ஸ்டார்ச்சுவஸ்துவை இழந்து விடாமல் தங்களுடைய தண்டுகளின் பட்டைக்குள் கிரகித்துக்கொண்டு பத்திரப்படுத்துகின்றன. இபபடிப் பத்திரப்படுத்தப்படும் வஸ்துவானது அடுத்த வஸந்த காலத்தில் செடிகளில் இலைக்கொழுந்துகளை உண்டாக்குகின்றன. இலை உதிர்காலத்தில் இலைகளை உதிர்த்து நிற்கிற மரமொன்றை நாம்கவனிப்போமாகில் அம்மரத்தில்இலை ஸ்தலங்கள் தடித்திருப்பதை நாம்பார்க்கக்கூடும். அத்தடிப்புகள் அடுத்தபர்வகாலத்தில் உண்டாகப்போகிறப் புதிய இலைகளின் மொட்டுகள்.

கீழ்த்தரச் செடிவகைகள் வெவ்வேறு விதங்களில் தங்களுடைய ஸ்டார்ச்சு வஸ்துவை அழியாமல் சேர்த்துவைத்துக்கொள்கின்றன. வெங்காயம், உள்ளிப்பூண்டு இவ்வகைச்செடிகள் தங்களுடைய அடிபாகத்தில் இவ்வஸ்துவைச் சேர்ப்பதால் அச்செடிகளில் அந்தபாகம் பருத்து உருண்டை வடிவமாக ஆகிறது. சில செடிகள் பூமிக்குள் வேர்களில் இவ்வஸ்துவைச் சேர்க்கின்றமையால் கிழங்குகள் உண்டாகின்றன.


# அத்புத ஆரூடம்

5 கேள்விகளுக்கு ரூபா 1. மேல் கேள்வி 1க்கு 4அணா அதிகம் வி. பி. வேறு. கடிதம் எழுதும் நேரம் அனுப்பவும்.

ஸ்ரீ சக்தி தாயித்து:-இதனால் வியாபாரம், உத்தியோகம், பயிர்த்தொழில் விருத்தியாகும். ஸ்திரீகளுக்கும், குழந்தைகளுக்கும் சங்காதோஷங்களும் கிரக தோஷங்களும் அடியோடு நிவர்த்தியாகும் சகல நன்மைகளும் உண்டாகும். விலை ரூபா 4 வி. பி. வேறு. நமது பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்பவும். வெளிநாடுகளுக்கு எல்லாம் 2 பங்கு சார்ஜ் முன்பணம் அனுப்பவும்.

பலாசூர் N. ராமநாத சாஸ்திரியார்

அடையாறு லைப்ரேரி பண்டிதர் மைலாப்பூர்—சென்னை




## கிருஸ்தவ மிஷன்களின் கிராமச்சீரமைப்பு வேலை.

இந்திய ஜனத்தொகையில் 3/4 பாகம் கிராமஜனங்கள், கிராம ஜனங்களுள் 100 இல் 80 பெயர்கள் வியவஸாயத்தையே ஜீவனமாக வஹிக்கிறார்கள், சொந்த நிலத்தைச்சாகுபடி செய்கிறவர்களின் சங்கியை வரவர குறைந்து வருகிறது. இதற்குக் காரணம் கடன்களுக்காக நிலங்கள் ஜப்தி செய்யப்பட்டுப் பராதீனமாவதுதான். மேலும், குடும்பங்களில் பங்கு பிறிக்கப்படும்பொழுது நிலங்கள் துண்டு துண்டுகளாக பிறிக்கப்படுகிறபடியால் இச்சிறிய துண்டுகள் முயர்ச்சிகளுக்கேற்றபடி பயன்களைக்கொடுக்கிறதில்லை. ஆகையால் நிலச்சொந்தக்காரர்கள் இத்துண்டுகளையே வரும்படியின் நிமித்தம் நம்பியிருக்கக் கூடுகிறதில்லை. இவ்வித விஷயங்கள் கோயம்புத்தூரில் நடந்த கிருஸ்தவ மிஷன்களின் மஹாநாட்டில் எடுத்துக்காட்டப்பட்டன. சில்காலத்திற்குமுன் உலகத்திய கிருஸ்தவ மிஷன்களின் நிர்வாஹ சபையின் கூட்டமொன்று ஜெரூஸலத்தில் நடைபெற்றது. அதில் மிஷன்கள் கிராம ஜனங்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அந்தத் தீர்மானமானது கோயம்புத்தூர் மஹாநாட்டில் வற்புறுத்தப்பட்டது. கிராம ஜனங்களிற்கு ஆரம்பகல்வி போதனை விஷயமும், கிராமப்பள்ளிக்கூடங்களிற்கு வேண்டிய உபாத்தியாயர்களை பயிர்ச்சிசெய்யவேண்டிய விஷயமும், கிராமங்களில் ஜனங்களின் செல்வநிலையை உயர்த்த வேண்டிய விஷயமும், கிராமங்களில் பஞ்சாயத்து ஆக்ஷி ஏற்பட வேண்டிய விஷயமும், ஆலோசிக்கப்பட்டன. மிஷன்கள் கிராம பள்ளிக்கூடங்களை வைத்து நடத்துகின்றன. ஆனால், அவைகள் சரியானபடி நடத்தப்படவில்லை; பஞ்சாப் மாஹாணத்தில் மாத்திரம் தான் கிராமப் பள்ளிக்கூடங்களில் கிராம விஷயங்கள் போதிக்கப்படுகின்றன. ஜனங்கள் ஆரம்பக்கல்வி விஷயமாக அதிக ருசியை வகிக்கிறார்களென்பதைக் கொண்டு மாஹாண கவர்மெண்டுகள் அக்கல்வி சம்பந்தமாக அதிக சிரத்தையை எடுத்திருக்கிறார்கள். மிஷன்கள் சரியாய் நடக்காத பள்ளிக்கூடங்களை எடுத்து விட்டு சரியாய் நடக்கிறவைகளைப் பாராட்டி அவைகளை உயர்வான நிலையில் கொண்டு வரவேண்டுமென்று கோயம்புத்தூர் மஹாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. கிராமப் பள்ளிக்கூடங்களில் கிராம விஷய போதனைகள் நடைபெறவேண்டும். மேலும், கிராமங்களில் வயதுவந்தவர்

களுக்கும் கல்விபோதனை நடந்தாலொழிய கிராமப் பள்ளிக்கூடங்களில் சிறுவர்களுக்காக நடத்தப்படும் கல்விபோதனை முயற்சிகள் வீண்போகக்கூடும். கிராமங்களில் ஜனங்கள் எழுதப்படிக்கிற யோக்கியதையை வஹிக்கவேண்டும். மேற்சொன்ன விஷயங்களெல்லாம் கோயம்புத்தூர் மஹாநாட்டில் ஆலோசிக்கப்பட்டன.

கிராம முன்னேற்ற சம்பந்தமாக, கிராமப்பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் வெகு உபயோகமானவர்கள். அவர்கள் கிராம ஜனங்களை சரியான வழிகளில் போதிக்கக்கூடும். வியவஸாய இலாகாவின்போதனைகளையும் நிரூபணங்களையும் அவர்கள் ஜனங்களுக்குத்தக்கபடி விஸ்தரித்து எடுத்துக்காட்டிபோதிக்கக்கூடும். அவர்கள் கிராமங்களின் சுகாதார சீர்கேடுகளையும், தரித்திர நிலையையும் வியவஸாய விஷயங்களையும், கூட்டுறவு விஷயங்களையும், ஸஹாயத்தொழில் விஷயங்களையும் அறிந்து கொள்ளக்கூடும். வியவஸாயிகள் சாவுகார்களிடத்தில் கடன் வாங்குவதையும் ஈன விலைக்கு மாசூல்களை முதலாளிகளுக்கு விற்பதையும், சில்லரை உத்தியோகஸ்தர்கள் கிராம ஜனங்களைத் தொந்திரவு செய்வதையும், ஒழிப்பதின் நிமித்தம் பிரசாரங்கள் செய்யப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. பண்டைகாலம்போல் கிராமங்களில் பஞ்சாயத்து அதிகாரம் அமைக்கப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

# வர்த்தமானக் குறிப்பு

சில நாட்களுக்கு முன் நடைபெற்ற சென்னை சட்டசபையின் மீடிங்கில் கவர்மெண்டின் செலவு திட்டங்கள் ஆலோசிக்கப்பட்டபொழுது, கவர்மெண்டின் பாரெஸ்டு விஷய நோக்கங்கள் விவாதிக்கப்பட்டன. அங்கத்தினர்கள் பாரெஸ்டு இலாகாவின் சீர்கேடுகளையெடுத்துக்காட்டிக் கண்டனஞ் செய்தனர். அவ்விலாகாவில் அதிகச் சம்பளமுள்ள உத்தியோகஸ்தர்கள் கணக்கில்லாமலிருக்கிறார்களென்றும், அத்தனை பெயர்கள் அதற்கு வேண்டியதில்லை யென்றும் வாதிக்கப்பட்டது. பாரெஸ்டுகளுக்கு அருகில் வாஸம் செய்யப்பட்ட ஜனங்கள் அதிக தொந்திரவுகளை அனுபவிக்கிறார்களென்றும், பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் குறைகளை கவர்மெண்டார் சரிவர



கவனிக்கிறதில்லை யென்றும், அவைகளுக்குத் தக்கப்படி அதிகாரங்களை அவர்கள் கொடுக்கிறதில்லை யென்றும், கூறப்பட்டது. பாரெஸ்டு பஞ்சாயத்துகள் செய்ய வேண்டிய வேலைகளைப்பற்றி கவர்மெண்டார் ரூல்களை ஏற்படுத்தவில்லை யென்றும், மேல் மேலும் பஞ்சாயத்துகளை ஏற்படுத்த கவர்மெண்டார் முயர்ச்சிகளை எடுத்துக்கொள்ளவில்லை யென்றும், நன்றாய் எடுத்துக் காட்டப்பட்டது. அநேகமான பாரெஸ்டு பஞ்சாயத்துகள் காடுகளை நன்றாய் வைத்துக்கொண்டுநிர்வஹிக்கின்றனவென்று கவர்மெண்டார் ஏற்கனவே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சில ஜில்லாக்களில் முள் காடுகள் அதிகமாய் வளர்ந்திருக்கின்றன. அவைகள் காட்டு மிருகங்கள் அடைவதற்கும், மலேரியா உண்டாவதற்கும், இடம் கொடுக்கின்றன. பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் விஷயங்களில் அதிகாரத்தை வஹிக்கிற கவர்மெண்டு மெம்பராகிய ஸர் நார்மன் மாரஷ் பாக்ஸ் அவர்கள் பஞ்சாயத்துகளின் நிர்வாஹத்திற்கு ஒப்பிவிக்கப்பட்டிருக்கிற காடுகள் பஞ்சாயத்தார்களாலேயே நிர்வஹிக்கப்பட வேண்டுமென்றும், கவர்மெண்டார் அவைகளின் நிர்வாஹத்தில் அல்ப பாத்தியதையைத்தான் வஹிக்கப்போகிறார்களென்றும், எருவிற்காக தழைகளைக் கழிக்கவேண்டிய வகையில் ரிஸர்வுகள் மாத்தி மாத்தி உபயோகிக்கப்படவேண்டுமென்றும், உத்திறவுகள் வெளியாகும் என்று கூறினார். கனம். லா மெம்பர் அவர்கள் பின்பு பேசினார். அவர் பேசியதில் கவர்மெண்டாரின் நோக்கம் பாரெஸ்டுகளிலிருந்து நல்ல வரும்படி ஏற்படவேண்டியதே யென்றும், ரிஸர்வுகளில் வேட்டையாடுவதற்கு லைஸன்சுகள் கொடுக்கப்படுகின்றன வென்றும், கிராமங்களிற்கு அருகிலுள்ள சதுப்பு நிலங்களைச் சுத்தப்படுத்துவதற்காக உத்திறவுகள் வெளியாயிருக்கின்றனவென்றும், விறகு ஒழுங்கானவிலைக்கு விற்கப்படும்படி உத்திரவுகள் வெளியாகியிருக்கின்றனவென்றும் கூறினார். கவர்மெண்டார் எவ்வித முயர்ச்சிகளை எடுத்துக்கொண்ட போதிலும் சின்ன உத்தியோகஸ்தர்களின் தொந்திரவுகள் ஒழிய மாட்டா. இப்பொழுது உண்டாயிருக்கிற பாரெஸ்டு பஞ்சாயத்துச் சங்கமானது ஜில்லாக்களில் கம்மிட்டிகளை ஏற்படுத்தி அவைகளை இச்சீர் கேடுகளைக் கவனித்து அதிகாரிகளுக்கு ரிபோர்ட்டு செய்யும்படிச் செய்யவேண்டும்.

மேல் கூறப்பட்ட சட்டசபையின் மீடிங்கில் கிராமங்களின் சுகாதாரக் குறைகளைப்பற்றியும், அவைகளில் பானத்திற்கு சுத்த நீர் அகப்படாமலிருப்பதைப்பற்றியும் விவாதிக்கப்பட்டன. கவர்மெண்டுக்கு வரப்பட்டவரிப்பணத்தின் பெரும் பாகம் கிராமத்தவர்களிடத்திலிருந்து தான் வருகிறது. கவர்மெண்டார் பணங்களை பட்டணங்களின் சம்பந்தமாகவே சிலவிட்டுக்கொண்டு கிராமங்களின் கஷ்டங்களை கவனியாமலிருக்கிறார்கள். ராவ் பஹதூர் முனிசாமி நாயுடு காரு இவ்விஷயத்தை நன்றாய் விவாதித்த பின்பு சுகாதார மந்திரியவர்கள் கிராமச் சிலவுக்கென்று ஒரு பண்டு ஏற்படுத்தப்படவேண்டும் என்பதை ஒப்புக் கொண்டார். கிராமங்களின் சிலவுகளுக்கு இந்நிதியிலிருந்து தொகைகள் எடுத்துக்கொள்ளப்படக்கூடும்.

---

அதேசட்டசபை மீடிங்கில் அந்நிய நாடுகளுக்கு நமது தேசத்திய எருச் சாமான்கள் எற்றுமதி செய்யப்படுவது நிறுத்தப்படவேண்டுமென்று வாதிக்கப்பட்ட பொழுது அநேகம் பெயர்கள் அதை ஒப்புக்கொள்ளவில்லை மிஸ்டர் வி. ஈ. உட் அவர்களும் அப்படிச் செய்வது நமது தேசத்திற்குக் கெடுதியைத்தான் விளைக்குமென்று கூறினார்.

---

வேலையில்லாத மாதங்களில் வியவஸாயிகள் அனுஷ்டித்து அதிகவரும்படிகளை அடையும்படியான சில ஸஹாயத் தொழில்களை அமைக்க வேண்டிய நிமித்தம் ஆராய்ச்சிகளை நடத்தி முயர்ச்சிகளைக் கைக்கொள்ளவெண்டுமென்று கவர்மெண்டார் பலதடவைகளில் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள், கவர்மெண்டார் இது ஸம்பந்தமாய் இன்னும் ஒரு யோஜனையையும் சொல்லவில்லை. இவ்விஷயத்தில் ஆராய்ச்சி செய்யும் உத்தியோகஸ்தரின் ரிபோர்டு சீக்கிரத்தில் வெளிவருமாம். கவர்மெண்டார் அது வெளி வந்த உடனே மேல் வேலையை எடுத்துக்கொள்வார்களென்று நம்புகிறோம்.

---

கிராமங்களில் பாதைகள், ரஸ்தாக்கள் இவைகளைச் சீர்திருத்துவதற்காக கவர்மெண்டார் லோகல்பாடிகளுக்குக்கொடுக்கும் கிராண்டுகள் போதாமலிருப்பதால் கிராம ரோட்டுகளும், ரஸ்தாக்களும், பாதை



களும் சரியான நிலையில் வைக்கப்படக் கூடுகிறதில்லை. ஆகவே, கிராம ரோட்பண்டு என்று ஒரு நிதியை யுண்டு பண்ணினால் கிராம ரஸ்தாவகைராக்கள் ஒழுங்கு செய்யப்படக் கூடுமென்று மேற்கூறிய சட்டஸபை மீடிங்கில் சிலர் வாதித்தார்கள். ஆனபோதிலும், சில மெம்பர்கள் புத்திக்கலவரத்தினால் அந்த ஏற்பாட்டின் ஸம்பந்தமான விவரங்களையும், நோக்கங்களையும் சரியாய் தெறிந்து சொள்ளவில்லை. அடுத்த மீடிங்கில் அவர்கள் இவ்வித பண்டு உண்டாவதற்கு தக்கப் பிரயாசையை எடுத்துக்கொள்ளவேண்டும்.

---

கவர்மெண்டார் நூல் நூற்கிறது, கை நெசவு இத்தொழில்களின் அபிவிருத்தி விஷயமாய் சில உத்திரவுகளை வெளியிட்டிருக்கிறார்கள். கவர்மெண்டார் இத்தொழில்கள் அபிவிருத்தி செய்யப்படவேண்டிய ஆவசியத்தை சரியாய் உணர்ந்தது திருப்தியைக்கொடுக்கிறது. நெசவுக்காரர்களும் நல்ல வரும்படிகளை அடையவேண்டும், நல்ல வஸ்திரங்களும் அதிக விலையில்லாமல் விற்கப்பட வேண்டுமென்பது அவர்களின் நோக்கமாக விருக்கிறது. நெசவுக்காரர்களின் சம்பந்தமாக கூட்டுச்சங்கங்களை உண்டாக்கப்போகிறார்கள். அவர்களுக்கு கடன் கொடுப்பதோடு நூல்களையும் வாங்கிக் கொடுக்கப்போகிறார்கள். நெசவுத் தொழிலாளிகள் குடியில் முழுகியிருக்கிற ஜாதியார்களாகையால் அவர்கள் குடியை நிறுத்த வேண்டிய விஷயமாய் முயர்ச்சிகளையும் கவர்மெண்டார் கைக்கொள்ளப் போகிறார்கள்.

---

வங்காளத்தில் சுகாதார இலாகாவின் தலைவராகிய டாக்டர் ஸி. எ. பெண்டிலி கல்கத்தா ரோடரி கிளப்பில் உபந்நியஸிக்கையில் ஒவ்வொரு 1000 க்ஷய ரோக மரணங்களில் 121 பாதிரிமார்களது, வைத்தியர்களினது 128, வக்கீல்களினது 130, குடியானவர்களது 139 போலீஸ்காரர்களது 167, ஹோட்டல்காரர்களது 268, தெய்யல்காரர்களது 385, கல்வேலை செய்கிறவர்களது 391, உபாத்தியாயர்களது 396, அச்சடிப்பவர்களது 398 ஆக விருக்கின்றனவென்று கூறியிருக்கிறார்கள். அச்சடிக்கிற தொழிலிலும், உபாத்தியாயத் தொழிலிலும், கல்வேலைத் தொழிலிலும் தெய்யக்காரத்தொழிலிலும், ஹோட்டல்காரத்தொழிலிலும் இருக்கப்பட்டவர்களுக்கு அதிகமாக

க்ஷய ரோகம்வருகிறதென்று விளங்கும். க்ஷய ரோகம் ஏழ்மை ஸ்திதியிலிருப்பவர்களை அதிகமாகத்தாக்குகிறது.

---

1923ம் வருஷத்தில் சிந்தில் லாய்டு பாராஜ்ஸ் தாபானம் வேலையைத்தொடங்கப்போகிறதாம். பம்பாய் கவர்மெண்டார் அக்காலத்தில் 50000 ஏகர் நல்ல நிலத்தை 3000 குடியானவர்களுக்குக் கொடுக்க உத்தேசித்திருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் 16 இலிருந்து 20 ஏகர் நிலம் கொடுக்கப்படுமாம். 5 வருஷங்களுக்கு இக்குடியானவர்கள் ஏகர் ஒன்றுக்கு 3 ரூபாய் வீதம் வரியைச் செலுத்த வேண்டுமாம். அதற்குப் பின்பு அவர்கள் யதோக்த வரிகளைச் செலுத்திக்கொண்டு 20, 30 வருஷங்கள் வரையில் கிராமத்திற்காக சுவல்ப கட்டணத்தை வருஷந்தோறும் செலுத்தவேண்டுமாம்.

# இந்திய விவசாயம்

ஏழாவது வருடம் நடக்கிறது.

பயிரிடும் முறை, கால்நடை பரிபாலனம், கூட்டுறவு கிருஷிகர் செய்யக்கூடிய சிறு தொழில்கள், முற்போக்கான விவசாய முறைகள், முதலிய பல விஷயங்களைக்கொண்டு வெளிவரும் ஓர் தமிழ்ப் பத்திரிகை:

மானேஜர், இந்திய விவசாயம் ஆபீஸ்,
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினாப்பள்ளி.

# அறிக்கை

"ரூரல் இந்தியா" சந்தாதுகைகளும் அட்வர்டிஸ்மெண்டு கட்டணங்களும் பாரெஸ்டு பஞ்சாயத்து யூனியன் லிமிடெட்டுக்கு சேர்ந்தபணங்களாகையாலும் யூனியன் ரிஜிஸ்டராகி விட்டபடியால் கணக்கு ஒன்றாகவே இருக்க வேண்டியிருப்பதினாலும் இனி ஷேர் தொகைகள் பத்திரிகையின் மானேஜரின் விலாஸத்திற்கல்லாமல் அடியில் கண்ட விலாஸத்திற்கே அனுப்பப்பட வேண்டியதென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

A. ராஜகோபால ரெட்டி.

பிரஸிடெண்டு, பாரெஸ்ட்டு பஞ்சாயத்தார் யூனியன் லிமிடெட்டு
முகாம்:—பாலவாக்கம், ஊத்துக்கோட்டை போஸ்டு செங்கற்பட்டு



நமது நகரில் பிரசுரமாகும் "டெல்லி நியூஸ்" பத்திரிகை ஏப்ரில் 27௳ பிரதியில் பின்வருமாறு வரைகிறது. நம்முடைய தேசத்தில் ஜனங்கள் சரீரங்களைச் சுத்தமாக வைத்துக் கொண்டிருப்பது வெளி தேசத்தவர்களால் புகழப்பட்ட போதிலும் நாம் அதைக் கொண்டு திருப்தியையடையக்கூடாது. நாம் தினந்தோறும் ஸ்நானம் செய்கிறோம், வீடுகளைப் பெருக்கி அலம்பி சுத்தமாய் வைத்துக் கொள்கிறோம். ஆனால், நம்முடைய கிராமங்களில் நரகலும் குப்பையும் போர் போராகக் குமிந்திருப்பது ஸமூகத்தைச் சேர்ந்த பிரதி நபருக்கும் சுகக் கேட்டை யுண்டுபண்ணக்கூடியதில்லையா? நம்முடைய தேசத்தில் ஜனங்கள் வெகுவாய் ஜோடு போடாமலே தெருக்களில் நடப்பது ஸஹஜமாக விருக்கிறது. நடக்கப்பட்டவர்கள் இக்குப்பைகளையும் நரகல்களையும் மெதியாமலும் நடக்கக்கூடுமா? நம்முடைய வீடுகளைப் பெருக்கின குப்பையை நாம் தெருவில் தானே போடுகிறோம். அப்படிச் செய்வது ஸமூக சுகாதாரத்திற்குக் கெடுதலாக ஏற்படவில்லையா? நம்மில் தனித் தனி நம்பர்கள் சரீர சுத்தத்தை யனுஸரித்த போதிலும், ஸமூகத்தைச் சேர்ந்தவர்களாக நாம் சுகாதாரத்தை யனுசரிக்கிறதில்லை. தமிழ் நாட்டில் பிரயாணம் செய்தால் மேற்ச் சொல்லிய விஷயம் நன்றாய் அறியப்படும். ஜனங்கள் ஜலமல நிவர்த்திகளைக் கண்ட இடங்களில் செய்து கொண்டும், ஆறுகளை அசுத்தப்படுத்திக் கொண்டு மிருப்பதை நாம் பார்க்கலாம். மற்ற மாகாணங்களில் இவ்வித அனாசாரம் இவ்வளவு தூரம் அப்பியஸிக்கப்படுகிறதில்லை. கிருஷ்ணா நதியின் மேல் பெஜவாடாவில் ரெயில் வண்டி செல்லும்பொழுது நாம் கண்களை நோக்கினோமானால் ஆற்றிலும் அதன் கரையிலும் மனிதர்கள் கூட்டம் கூட்டமாக உட்கார்ந்து கொண்டு மல நிவர்த்தி செய்வதை நாம் பார்க்கக்கூடும். ஆற்றின் நீர் எப்படி பானத்திற்கு யோக்கியமாக விருக்கும். முனிஸிபாலிடிகள் இவ்வித சீர் கேட்டை யொழிக்க முயலவேண்டும். சுயராஜ்யத்திற்குப்பாடுபடுகிறவர்கள் இவ்வித சுகாதார அநாசாரங்களை முதல் முதலில் ஒழிக்க முயர்ச்சி செய்யவேண்டும். இராஜீய பிரச்சாரர்கள் ஜனங்களுக்கு இவ்வகை விஷயங்களில் நன்றாய் போதனைகளைச் செய்யவேண்டும். போதனைகள் இடைவிடாமல் செய்யப்பட்டால் ஜனங்கள் இவ்வழக்கங்களை விடமாட்டார்கள். முனிசிபல் கௌன்சில்லர்களும் இதரப் பிரமுகர்களும் சிரத்தையை யெடுத்துக் கொண்டு இவ்விதச் சீர் கேடுகளை யொழிக்கவேண்டும்.

---

நாகின் தாஸ் அமல்காய் என்கிற ஸீமான் மஹாத்மா காந்தியவர்களுக்கு கிராமாபி விருத்தி ஊழியர்களைத் தயாரிப்பதற்காக 1,00,000 ரூபாயைப் பண உதவியாகக் கொடுத்திருக்கிறார். மஹாத்மா காந்தி அவர்கள் ஒரு பள்ளிக்கூடத்தை ஸ்தாபிக்க உத்தேசித்திருக்கிறார். ஆமதாபாத் தேசீய ஸர்வகலாசாலையின் நோக்கங்களிற்கு இணங்கி, கல்வி முடிந்த பின்பு ஐந்து வருஷ காலம் குறிப்பிட்ட ஊர்களில்

வேலை செய்ய ஒப்புக்கொள்ளுகிற மாணவர்கள் மாத்திரம் தான் அந்தப்பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்படக் கூடுமாம். ஒவ்வொரு வித்தியார்த்திக்கும் மாசம் ஒன்றுக்கு 20 ரூபாய் வீதம் கொடுக்கப்படுமாம். மெட்ரிக்யுலேஷன் வகுப்பு வரையில் படித்தவர்கள் இரண்டு வருஷ காலம் பாடசாலையில் படிக்க வேண்டுமாம். பீ. ஏக்கள் ஒரு வருஷம் படித்தால் போதுமாம். படிப்பான பின்பு மாணவர்கள் 30 ரூபாயிலிருந்து 60 ரூபாய் வரையிலுள்ள மாதச்சம்பளங்களை யடையக்கூடுமாம். குஜராத்தி பாஷையிலும், பூமி சாஸ்திரத்திலும், வியாபாரக் கணக்கு சாஸ்திர விஷயங்களிலும், ஸங்கீதத்திலும், பஜனைகளை நடத்த வேண்டிய வகையிலும், செல்வ சாஸ்திர விஷயங்களிலும், நால் நூற்கிற தொழில் விஷயங்களிலும், தச்சு வேலையிலும், சுகாதார விஷயங்களிலும், தேகப்பயிர்ச்சி விஷயங்களிலும், வீடுகளில் அநுஷ்டிக்கக் கூடிய வைத்திய விஷயங்களிலும், போதனைகள் அப்பள்ளிக்கூடத்தில் நடத்தப்படுமாம். மாணவர்கள் பள்ளிக்கூடத்தை விட்ட பின்பு பள்ளிக்கூடங்களில்லாத கிராமங்களில் பள்ளிக்கூடங்களை வைத்துக்கொண்டும், நால் நூற்கிற வேலை, பட்டை போடுகிற வேலை இவைகளில் கிராம ஜனங்களுக்கு நிரூபணங்களைச் செய்து காட்டிக்கொண்டும் அவர்களுடைய குறைகளை அதிகாரிகளுக்கு தெரிவித்துக் கொண்டுமிருக்க வேண்டுமாம். இவ்வித கல்விச்சாலையை பிரதிமாஹாணத்திலும் அமைப்பது வெகு அவசியமாயிருக்கிறது. மாஹாணங்களிலுள்ள தேச பக்தியுள்ள சீமான்கள் இவ்வித கைங்கரியத்தைக் கைகொள்ள வேண்டுமென்று வணக்கமாய்க் கேட்டுக்கொள்வோம்.

## ஆரோக்கிய விஷயக் குறிப்புகள்

### ஆரஞ்சு பழத்தோல்.

ஆரஞ்சு பழத்தோலில் போஷண வஸ்துக்கள் நிரம்பியிருக்கின்றன. அதன் தோலில் இரண்டு அடுக்குகள் இருக்கின்றன. மேலடுக்கு கெட்டியாகவும் நல்ல நிறமுள்ளதாகவும், உள் அடுக்கு ஜவ்வைப்போன்றதும் வெள்ளை நிரமானதுமாகவும் இருக்கின்றன. மேல் அடுக்கில் எண்ணை கோளங்களிருக்கின்றன. அது அபான வாயுவைக் கலைக்கக்கூடியது. மேல் அடுக்கில் நரம்புகளுக்கும் ரத்தத்திற்கும் அவசியமான பி. ஸீ. ஜீவ வஸ்துக்கள் இருக்கின்றன. ஆகவே, ஆரஞ்சு பழத் தோலை ஜனங்கள் உபயோகியாமல் எறிந்து விடுவது தப்பு. அதைஷர்பத்து செய்யக் கூடும், சட்ணியாகச் செய்து சாப்பாட்டில் உபயோகிக்கக்கூடும்.

### எலுமிச்சம் பழத்தோல்.

எலுமிச்சம் பழத்தோலில் மஞ்சள் நிறமுள்ள ஒரு மேல் அடுக்கும் வெள்ளை நிறமுள்ள ஒரு உள் அடுக்கும் இருக்கின்றன. மேல் அடுக்கில் எண்ணைக் கோளங்களிருக்கின்றன. எலுமிச்சம் பழத்தோலிலும் பி. ஸி. ஜீவ வஸ்துக்களிருக்கின்றன. அவை ரத்தத்திற்கிம் நரம்புகளிறகும் அவசியமானவை.



### உருளைக்கிழங்கின் தோல்.

நம்மவர்கள் உருளைக்கிழங்கைச் சமைப்பதில் அதை அதிக ஜலத்தில் வேகவைத்துத் தோலையுரித்து தோலையும் ஜலத்தையும் கொட்டி எறிந்து விடுகிறார்கள். உருளைக்கிழங்கின் தோலில் உயர்வான போஷணை ஜீவவஸ்துக்களிருக்கின்றன. உலோக உப்புகளும், கரையக்கூடிய கொழுப்புகளும் அதில் இருக்கின்றன. உருளைக் கிழங்குத் தோலிலுள்ள ஸெல்கள் மலத்தைக் கழிக்கிற குணத்தை உடைத்தாயிருக்கின்றன. உருளைக்கிழங்கை ஆவியில் சமையல் செய்வது நலம். அது வெந்த நீர் இதரக்காய் கறிகளை சமைப்பதற்கும் பருப்பை வேகவைப்பதற்கும் உபயோகிக்கப்படக்கூடும்.

### பசளைக் கீரை.

பசளைக் கீரையின் இலைகளில் இரும்பு சம்பந்தமான ரஸாயனமிருக்கிறது. இக்கீரையை உட்கொண்டால் சரீரம் வலுவையடையும்.

### டீ, காபி, கோகோ இவைகளின் கெடுதிகள்.

தேயிலைப் பானத்தில் அபாயத்தை விளைக்கக்கூடிய 'காபீன்' என்கிற சரக்கொன்று அதிகமாக விருக்கிறது. அது டீயை உபயோகிப்போருக்கு முதலில் உத்தீபனத்தை உண்டு பண்ணி பிறகு பலஹீனத்தை விளைக்கிறது. அதைத்தவிர்க்க அந்த உத்தீபன வஸ்துவையே மறுபடியும் உபயோகிக்கும்படியும் செய்கிறது. கடைசியில் உபயோகிப்பவர்களின் உடம்பைக் கேவலஸ்திதியில் கொண்டுவந்து விடுகிறது. தேயிலைப்பானத்தில் டானிக் ஆஸிட் இருக்கிறது. இது ஜீரணத்திற்கு வெகு கெடுதலானது. தேகத் தளர்ச்சிக்கும், அதிருப்திக்கும், வியாகூலத்திற்கும் தேயிலைப் பானமே காரணமாயிருக்கிறது. அது அஜீரணம், தூக்கமின்மை, சோகை, மலச்சிக்கல் இவைகளை உண்டு பண்ணி மதுபானம், மருந்துண்ணல் இவைகளிற்கு ஹேதுவாகிக் கடைசியில் பைத்தியம் பிடிக்கச் செய்யும். காப்பியும் கோகோவும் இதைப் போல் கெடுதல்களையுடையவைகளே. பின் பகலில் டீ, காபி முதலியவைகளைப் பானம் பண்ணுவது வெகு கெடுதலானது. பகலில் உண்ட போஜனம் ஜீரணமாகுமுன்னரே பக்ஷணங்களும் டீ, காபி முதலியவைகளும் உட்கொள்ளப்படுவதால் வயிற்றில் புளிப்பு தட்டி அஜீர்ணம் உண்டாகிறது. இவைகளையுபயோகிப்பதைவிட ஜனங்கள் சுத்த ஜலத்தில் பழ ரஸங்களைப் பிழிந்து பானம் பண்ணுவது எவ்வளவோ மேலானது.

### சர்க்கரையை அதிகமாய் உபயோகிக்கக்கூடாது.

குழந்தைகளிடத்திலும் வயதானவர்களிடத்திலும் உண்டாகும் ஜீரணக் கோளாறுகள் எல்லாம் சர்க்கரை வயிற்றில் புளித்துப்போவதினால் உண்டாகின்றன. வயிற்றில் அதிக புளிப்புத் தட்டுதல், வாயு அதிகரித்தல், மலச்சிக்கல் வயிற்றுப் போக்கு முதலியவைகள் இக்காரணத்தினால் தான் பெரும் பாலும் உண்டாகின்றன.

19-9-ஷ்டு மே-மீ 15-உ முடியஷேர் எடுத்துக்கொண்ட பஞ்சாயத்து மெம்பர்களின் ஜாப்தா. ஷேர் ஒன்றுக்கு ரூ ஒன்று தான் முந்திய சஞ்சிகையில் வெளியான சர்டிபிகேட் ரிஜிஸ்டர் 335

ஷை. ஷை. ஷை. ஷேர்சங்கியை 605

வடார்காடு ஜில்லா, சேலம் நத்தம் பஞ்சாயத்து 356 நடுபா ரெட்டியார் 5; நெல்லூர் ஜில்லா, வெங்கடேசபள்ளி பஞ்சாயத்து 357 மெண்டா வீராசாமி செட்டி 1; செங்கற்பட்டு ஜில்லா, நல்லூர் பஞ்சாயத்து 358 P. M. கிருஷ்ணசாமிபிள்ளை 1; குண்டூர் ஜில்லா சீமா குர்த்தி பஞ்சாயத்து 359 ராயர் பாட்டி சுப்பராயடு 2, 360 காந்தி மல்லா கனகய்யா 2, 361 மாரம் நாகி ரெட்டி 2; அனந்தபுரம ஜில்லா ஹோதிபட்டா பஞ்சாயத்து 362 குண்டி கௌட் 1, 363 யாரபநம்பருதரு 1, 364 பல்லிகட்டிப்பா நம்பருதரு 1, 365 இரண்ணை நடப நதரு 1, 336 வீரப்ப கஞ்சமடார் 1; பல்லாரி ஜில்லா, சோஜி பஞ்சாயத்து கே. பத்திரி பாலப்பா 1; தென்னார் காடு கல்லந்தல் பஞ்சாயத்து 368 முருகேச பிள்ளை 1; கோதாவரி ஜில்லா, சிந்தலபூடி பஞ்சாயத்து 369 அலபாடி ராமய்யாகாரு 1, 370 கினமல்ல வெங்கடசுவாமி 1, 371 கர்லபாடி வெங்கட ராமய்யா 1, 372 நாகி செட்டி வீரமநாயுடு 1, 373 சையட் இமாம் சாஹெப் 1; வடார்காடு ஜில்லா ஒதியத்தூர் பஞ்சாயத்து 374 D. குப்பு ராம முதலியார் 3, 375 எல். கண்ணய்யா நாயுடு 1, 376 ஈ. பி. ரெங்கய்யா நாயுடு 2, 377 கே. வெங்கடசாமி நாயுடு, 378 கே. பங்கய்யா நாயுடு 2; பல்லாரி ஜில்லா தாலஹைறல்லி பஞ்சாயத்து 379 ரெட்டி ஹொவி கௌட் 1; தென்னார்காடு ஜில்லா கோட்டேரி பஞ்சாயத்து 380 ரதி படையாச்சி 2; திருச்சிறைப்பள்ளி ஜில்லா வேலூர் பஞ்சாயத்து 381 அருணாசல ஒடையார் 1, 382 எம். முத்து வெங்கடாசல ரெட்டியார் 1, 383 நச்ச படையாச்சி 1, 384 எஸ் காலம செட்டியார் 1, 385 சோலை முத்து உடையார் 1, 386 பெருமாள் ரெட்டியார் 1, 387 சபாபதி படையாச்சி 1; தென்னார்காடு ஜில்லா கடுவனூர் பஞ்சாயத்து 388 முத்துசாமி பிள்ளை 1. 389 கொமார சாமி பிள்ளை 1, 390 கோவிந்தசாமி நாயுடு 1, 391 பி. பெருமாள் நாயடு 1, 392 நாராயண கவண்டர் 1, 393 சடைய கவுண்டர் 1, 394 எ. அப்பு நாயடு 1; அனந்தபுரம் ஜில்லா ரத்தினகிரி பஞ்சாயத்து 395 சுப்பராய் 1, 396 திம்மய்யா 1, 397 நரசப்பா 1, 398 சிக்க வம்மப்பா 1. 399 புஜம் தம்மியப்பா 1, 400 மத்தப்பா 1, 401 சுச்சி கௌட் 1. ஆ ஷேர்களின் கூட்டுதல் 663· சர்டிபிகேட் ரெஜிஸ்டர் கெ. 401.

---


இனம்! ரப்பர் முத்திரை இனம்!!

நமது சக்கரவர்த்தி அவர்களால் நன்கு மதிக்கப் பெற்ற 14 காரட் கோல்ட் நிப்பு பதித்த பவுண்டன் பேனா வெகு நாளைக்கு உழைக்கும், எல்லா காகிதத்திலும் நன்றாக எழுதும்.



இந்தபேனா வாங்குவோருக்கு அவர்களுடைய (முழு) விலாசத்துடன் (ரப்பர் முத்திரை) (இனமாய்) செய்தனுப்பப்படும்.

பேனா 1-க்கு ரூ 2—10—0 கேட்லாக் இனம்.

ஜீ எஸ், அண்ட் கோ.

8, கோவிந்தப்ப நாயக்கன் வீதி, (மதராஸ்)


199382

# SADHANA
# AUSADHALAYA
## DACCA (Bengal)

—ADHYAKHA—

**Joges Chandra Ghose**, M. A. F. C. S. (London)

*Formerly Professor of Chemistry, Bhagalpur College.*

மிகவும் சுத்தமான ஆயுர்வேத ஔஷதங்கள் கிடைக்கும் வேண்டியவர்களுக்கு விலைப்பட்டி இனமாக அனுப்பப்படும். வியாதியின் விவரத்தை தெரிவித்தால் இனமாக மருந்துபட்டி அனுப்பப்படும்.

மகரத்வஜம் (சுவர்ணஸிந்தூரம்)

அசல் தங்கத்துடன் ஒரு தோலா ... ரூ 4 0 0

இது எல்லா வியாதிகளுக்கும் கைகண்டமருந்து, பித்தம் வாதம் முதலிய வியாதிகளைப் போக்குவதுடன் ரத்தசுத்திக்கும் ஏற்றது.

சரிபாடி ஸாரஸா.

இது மூல ரோக ஸம்பந்தமான வியாதிகளுக்கெல்லாம் ஸரியான மருந்து.

விலை ஒருசேர் ரூ 3 0 0

சுக்ர ஸஞ்சீவி

இது வீர்யக்குறைவை, அபோகத்தன்மை, சுவப்னஸ்கிதம், முதலிய வியாதிகளுக்கு அமிர்தம் போன்ற மருந்து.

விலை சேர் 1க்கு ரூ 16 0 0

அபல பந்தப ஜரா.

இது ஸதிரீகளுக்கு உண்டாகும், இடுப்புநோய் முதுகுவலி கர்பப்பை வியாதி அகாலமாதவிடாய் முதலிய கொடும் வியாதிகளைப் போக்கும்.

16 டோஸ் ரூ 2. 50 டோஸ் ரூ.

# அம்ருதாஞ்ஜனம்

என்று லென்ன ?

தலைநோய், பக்க நோய், கீல் நோய்,
கன்ன நோய், கழுத்து நோய், ஒற்றைத்தலை நோய்,
வாய்வு நோய், முதுகு நோய், பல் நோய், மூலசங்கை,
சுளுக்கு, காயம், தேள், பூரான்,

பக்ஷவாதம், சைத்யம்
சளுப்பு, மார்சளி,
உப்புசம், மார்மூச்சு,
கழுத்து சளி, ரத்தம் விழுதல்,
சந்திவாய்வு, சீழ் விழுதல்




கண்டு, பேன், முகப்பருவு, வீக்கம்,
நோய், செகப்பு, தத்துகள், புடை,
சிறங்கு, தெனவு, எரிச்சல், இது
அது என்று சொல்வதேன் ?
எல்லா நோய்களையும்,
பாதைகளையும்,

போக்கும் ! போக்கும் !! போக்கும் !!!

மூன்று விசைகளிலும் போக்கும்.

**அமிர்தாஞ்சனம் டிபோ**

பம்பாய் & மதராஸ்.


lished by Mr. A. Rajagopala Reddi, President, Forest Panchayatdars' Union Ltd, M
*Printed by Mr. T. E. V. SARMA AT THE MAGAZINE PRESS*
*CHINGLEPUT*